# அரசகரும மொழிகள் திணைக்களம்

## மொழித் தேர்ச்சிப் பரீட்சை

விசேட குறிப்பு:

பரீட்சார்த்திகளின் வசதிக்காகவும் வழிகாட்டலாகவும் மொழித்தேர்ச்சிப் பேச்சுத் திறன் பரீட்சைக்கான உரையாடல் தலைப்புக்கள் பினிவருமாறு

IIஆம் மட்டம்

1. லீவு விடய எழுதுநராக உங்களைக் கருதி, அரச உத்தியோகத்தர் ஒருவருக்கு உரித்தான லீவுகள் குறித்த விபரங்களைக் கேட்கும் புதிய உத்தியோகத்தர் ஒருவருடனான உரையாடல்.

2. உத்தியோகத்தர் ஒருவரின் இருமொழி ஆற்றலின் முக்கியத்துவத்தைப் பற்றி மொழி மேம்பாட்டு உதவியாளர் ஒருவ - -ருக்கும் அரச உத்தியோகத்தர் ஒருவருக்கும் இடையில் நடைபெறும் உரையாடல்.

3. அண்மையில் உங்களது நிறுவனத்திற்குக் கொள்வனவு செய்யப்பட்ட கணனிகள் செயல் இழந்துள்ளன .அது தொடர்பாக கொள்வனவு செய்யப்பட்ட நிறுவனத்தின் உத்தியோகத்தருக்கும் பெறுகை உத்தியோகத்தருக்கும் இடையில் நடைபெறும் உரையாடலொன்று.

OFFICIAL LANGUAGES DEPARTMENT

4. பிரதம முகாமைத்துவ உதவியாளராக உங்களைக் கருதி, அலுவலகக் கோவைகளை சரியாகவும், முறையாகவும் பேணுவதன் முக்கியத்துவம் குறித்து புதிய உத்தியோகத்தர் ஒருவருடன் மேற்கொள்ளும் உரையாடல்.

5. உங்களது நிறுவனத்தினால் வழங்கப்படும் சேவைகள் குறித்து சேவைபெறுநர் ஒருவருடனான உரையாடல்.

6. குறைந்த வருமானமுடைய மக்களின் விருத்திக்காக முன்னெடுக்கக் கூடிய நடவடிக்கைகள் குறித்த ஆய்வறிக்கை ஒன்றை நீங்கள் தயாரிக்க வேண்டியுள்ளது. அது தொடர்பாக பிரதேசவாசி . .ஒருவருடனான உரையாடல்

7. உங்களது நிறுவனத்திற்கு சாரதிகளை புதிதாக ஆட்சேர்ப்பு செய்ய வேண்டியுள்ளது .ஆட்சேர்ப்பிற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவருடன் மேற்கொள்ளும் உரையாடல்.

8. உங்களுக்கு அனர்த்த துரிதக் கடனொன்றைப் பெற்றுக் கொள்ள வேண்டியதாகவுள்ளது. கடன் விடயப் பொறுப்பு உத்தியோகத்தர் ஒருவருடன் அது தொடர்பாக மேற்கொள்ளும் உரையாடல்.

9. போதைப்பொருள் பாவனையில் இருந்து இளைஞர்களை பாதுகாப்பது பற்றி சமூக சேவை உத்தியோகத்தருக்கும் இளைஞர் அமைப்பின் தலைவருக்கும் இடையில் நடைபெறும் உரையாடல்

10. உங்களது புது வீட்டு வரைபடத்திற்கு அனுமதி பெறப்பட வேண்டியதுள்ளது .அது குறித்து உரிய தொழில்நுட்ப உத்தியோகத்தருடனான உரையாடல்

OFFICIAL LANGUAGES DEPARTMENT